செய்தி வெளியீடு எண் : 803 நாள் : 29.04.2023

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம், தமிழ் நாடு வீட்டுவேலை தொழிலாளர் நல அறக்கட்டளையுடன் இணைந்து, 'பாதுகாப்பான புலம் பெயர்வுக்கான வழிமுறைகளை வலுப்படுத்துவது தொடர்பான ஒரு நாள் ஆலோசனை கூட்டம் தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் அரங்கத்தில் இன்று 29.04.2023 தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர், மாண்புமிகு திரு. நீதியரசர் எஸ்.பாஸ்கரன் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது.

தொடக்கவிழாவில் தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் செயலாளர் டாக்டர்.கே.விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையும் மற்றும் தமிழ் நாடு வீட்டுதொழிலாளர் நல அறக்கட்டளையின் தலைமை செயல்பாட்டாளர் சகோதரி.வளர்மதி அவர்கள் இந்த விழாவின் நோக்கத்தையும் விவரித்தார். தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர், மாண்புமிகு திரு. நீதியரசர் எஸ்.பாஸ்கரன் அவர்கள் அறிமுக உரையும், நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் திருமதி.கனிமொழி கருணாநிதி அவர்கள் தொடக்க உரையும், மற்றும் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி அவர்கள் முக்கிய உரையும் வழங்கினர். தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்கள் மாண்புமிகு திரு. நீதியரசர் ராஜ இளங்கோ மற்றும் மாண்புமிகு திரு.வி.கண்ணதாசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

விழாவை தொடர்ந்து இரண்டு குழு விவாதங்கள் நடைபெற்றன. முதல் குழு விவாதத்தில் லயோலா கல்லூரி LISTAR டாக்டர்,பெர்னார்ட் டி.சாமி, ஆகியோர் முறையே

தலைவர் மற்றும் நடுவராக இருந்தனர். இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம், கிளைச் செயலகத் தலைவர் மற்றும் புலம்பெயர்ந்தோர் பாதுகாவலர் டாக்டர். M.வெங்கடாசலம், இந்திய,வெளியுறவுப்,பணி, சென்னை மலேசிய தூதரக தொழிலாளர் இணைப்பாளர் டாக்டர்.பாலசுப்ரமணியன் A.தருமராஜா மற்றும் FEFSI தலைவர் (ம) திரைப்பட இயக்குநர்கள் சங்கத் தலைவர் திரு. ஆர்.கே. செல்வமணி, ஆகியோர்கள் புலம்பெயர் தொழிலாளர்கள் பிரச்சனைகள் குறித்த விவாதத்தில் கலந்து கொண்டனர்.

இரண்டாவது குழு விவாதத்தில் ஆந்திரா மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மாண்புமிகு திரு.நீதியரசர் மந்தட்டா சீதாராம மூர்த்தி, கேரளா மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர் மாண்புமிகு திரு.K.பைஜூநாத், மற்றும் பொதுத் துறை சிறப்பு செயலாளர் திருமதி. வி.கலையரசி, இ.ஆ.ப., ஆகியோர் பாதுகாப்பான புலம் பெயர்வை ஊக்குவிப்பதில் மாநில அரசின் பங்கு பற்றி அவரவர் மாநிலத்தின் மாதிரிகள் பற்றி விவாதித்தார்கள். இதில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் திரு.பொன்குமார் மற்றும் தமிழ்நாடு கூட்டணி நிறுவனர் மற்றும் உறுப்பினர் டாக்டர்.பி. பாலமுருகன் ஆகியோர் முறையே தலைவர் மற்றும் நடுவராக இருந்தனர்.

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர், மாண்புமிகு திரு. நீதிஅரசர் S.பாஸ்கரன், உறுப்பினர்கள் மாண்புமிகு திரு. நீதிஅரசர் ராஜ இளங்கோ மற்றும் மாண்புமிகு திரு.வி.கண்ணதாசன் மற்றும் டி.ஜி.பி/ பெருநகர சென்னை காவல் துறை ஆணையர் திரு.சங்கர் ஜிவால், இ.கா.ப., ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in